

# உயிர் கொல்லி டெங்கு





Published by:
Health education materials production unit
Department of community medicine
Faculty of medicine, university of Jaffna

Sponsored by: mercy MALAYSIA

Implemented by: CHA

Assisted by:
T.Kanathipan(2008/fm/27)
N.Thushiyanthy(2008/fm/71)
J.P.Anpalahan(2008/fm/49)
E.Shanthakumar croos(2008/fm/63)
M.Shopiga(2008/fm/65)

- வாந்தி
- தசைநார் மூட்டுக்களில் வலி
- வயிற்றுளைவு
- தோலின் கீழ் சிவந்த புள்ளிகள் அல்லது பருக்கள்
- 3-4 நாட்களில் அடையாளங்கள் குறைந்து
  நோய் குணமடையலாம்
- சிலருக்கு குருதிப்பெருக்கு நோயின் நிலை தோன்றும்

**டெங்கு குருதிப்பெருக்கு நோயின் அடையாளங்கள் எவை?**

- டெங்கு காய்ச்சலுக்கு இருந்த பொதுவான அறிகுறிகள்
- தோலின் அடியில் சிறிய இரத்த அடையாளம்



- கண்ணிற்கு பின்னால் நோவு
- கண்கள் சிவப்பு நிறமாக மாறுதல்
- மூக்கு முரசினால் இரத்தம் கசிதல்
- மலம் சலத்துடன் இரத்தம் வெளியேறுதல்

- அந்த நபரின் குருதியில் வைரஸ் கிருமி பெருகி 4-6 நாட்களில் நோயை விளைவிக்கும்.

## டெங்கு நுளம்பின் வாழ்கைப்பழக்கம்

- இது தேங்கி நிற்கும் இருளான சுத்தமான நீரில் பெருகும்
- இருட்டான வெளிப்புறத்திலும் மற்றும் உட்புறங்களிலும் காணப்படலாம்
- பிற்பகல் 4-6 காலை 6-8 நேரங்களில் கடிக்கும்.

## டெங்குக் காய்ச்சலில் வெளிக்காட்டப்படும் 3 நிலைகள் எவை?

1. **டெங்குக் காய்ச்சல்** - 3-4 நாட்களில் இந்நோயின் குணங்குறிகள் மறைந்து நோய் குணமாகும்.

   சிலருக்கு கீழ்காணும் நோய் நிலைகள் தோன்றலாம்.
2. **குருதிப்பெருக்கத்துடன் கூடிய காய்ச்சல்**
3. **டெங்கு அதிர்ச்சி நிலை**

## டெங்கு காய்ச்சல் நோயின் பொதுவான அறிகுறிகள் எவை?

- கடும் காய்ச்சல்
- கடும் தலைவலி

## டெங்கு காய்ச்சல் என்றால் என்ன?



- வைரசால் ஏற்படும் ஒரு தொற்றுநோயாகும்.
- இது ஈடிஸ் (Aedes) நுளம்பு களால் பரப்பப்படுகிறது
- நுளம்பின் உடம்பில் கறுப்பு வெள்ளை அடையாளங்கள் காணப்படும்.
- இந்த நுளம்பானது பெரும் பாலும் பகலில் மனிதனில் குருதியை உறிஞ்சும் (காலை யில் 6-8 மணிக்கிடையிலும் மாலையில் 4-7 மணிக் கிடையிலும்)

## இந்நோய் நுளம்பினால் எவ்வாறு தொற்றுகிறது?



- நோயுள்ள ஒருவரை நுளம்பு கடித்து குருதியை உறிஞ்சும்போது வைரஸ் கிருமியும் சேர்ந்து அதனுள் சென்றுவிடுகிறது.
- பின் அதே நுளம்பு சுகதேகி ஒருவரை கடிக்கும்போது வைரஸ் கிருமி அவருக்குள் சென்றுவிடும்.

- மாத விடாயின் போது கூடுதலாக குருதி வெளியேறுதல்
- வாந்தி அல்லது மலம் கறுப்பு நிறமாக மாறுதல்
- வயிற்று நோவு

## டெங்கு அதிர்ச்சி நிலை என்றால் என்ன?

- டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவரின் காய்ச்சல் திடீரென குறைந்துவிடும் எனினும் நோயாளி தொடர்ந்தும் சுகயீனமாக காணப்பட்டால் டெங்கு அதிர்ச்சி நிலை தோன்றலாம்.
- இது ஒரு ஆபத்தான நிலை
- தகுந்த சிகிற்சை அளிக்காவிடின் 12-24 மணிநேரத்தில் மரணம் சம்பவிக்கும்.
- மேற்படி நிலையிலுள்ள நோயாளியில் பின்வரும் பாரதூரமான அடையாளங்கள் நோய் கடுமையானதை காட்டும்:

- உடம்பு குளிர்ந்து போதல்
- உடல் வெளிறல் - வாயை சுற்றி நீல நிறமாதல்
- கலக்கமான தூக்க நிலை பதகளிப்பும் குழப்பமான நிலையும் காணப்படும்.
- வேகமாக மூச்செடுத்தல்
- நாடித்துடிப்பு அதிகரித்தல்
- குருதியமுக்கம் குறைதல்

## டெங்கு அறிகுறி காணப்படின் நீங்கள் கவனிக்க வேண்டியவை எவை?

- நோயாளிக்கு தனிமைப்படுத்தி பூரண ஓய்வு கொடுத்தல் வேண்டும் (பிள்ளைகள் பாடசாலை செல்லுதலை தவிர்க்கவும்)
- அதிகளவில் தண்ணீர் வகைகளை உள்ளெடுத்தல்.



- உரிய வைத்திய ஆலோசனையின்றி மருந்துகள் எடுப்பதை தவிர்க்கவும். (குறிப்பாக டிஸ்பிரின் ஆஸ்பிரின் மருந்துகள் எடுப்பது தவிர்க் கப்படல் வேண்டும். ஏனெனில் அவை குருதிப்பெருக்கை அதிகமாக்கும்)
- காய்ச்சலைபற்றி சந்தேகம் இருப்பின் அல்லது குருதிப்பெருக்கு அல்லது டெங்கு அதிர்ச்சி நிலைக்குரிய குணங்குறிகள் இருப்பின் உடனடியாக வைத்திய உதவியை நாடவும்.